
වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயல்திறன் அறிக்கை

Annual Performance Report

2020











ශ්‍රී ලංකාවේ ජාතික බුද්ධිමය දේපළ කාර්යාලය
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்
National Intellectual Property Office of Sri Lanka

வருடாந்திர செயல்திறன் அறிக்கை

2020

தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
தாபனத்தின் பெயர்: தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

உள்ளடக்கம் **பக்கம்**

அத்தியாயம் 01 -	தாபன ரீதியான கண்ணோட்டம்	1-9
அத்தியாயம் 02 -	முன்னேற்றம் மற்றும் தொலை நோக்கு	10-31
அத்தியாயம் 03 -	ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை	32-55
அத்தியாயம் 04 -	செயலாற்றுகைக் குறிகாட்டி	56
அத்தியாயம் 05 -	நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை	57
அத்தியாயம் 06 -	மனித வளக் கண்ணோட்டம்	58-62
அத்தியாயம் 07 -	இணக்கப்பாட்டு அறிக்கை	63-81

1. தாபன ரீதியான கண்ணோட்டம்

1.1 அறிமுகம்

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திடம் இலங்கையின் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பினை நிருவகித்தல் தொடர்பான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

எந்தவொரு நாட்டிலும் மொத்தப் பொருளாதார அபிவிருத்தியின் போது, விஷேடமாக அறிவு பிரதான வகையில் முனைப்பாகவும் மற்றும் நிச்சயமான வகையிலும் முக்கியத்துவம் பெறும் தற்கால சூழ்நிலையில் புலமைச் சொத்துக்கள் அத்தியவசியமான மற்றும் விஷேடமான கடமைப் பொறுப்பு ஒன்றினை மேற்கொள்கின்றது. மானிட முயற்சிகள் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு துறையிலும் முதலீடு, புத்தாக்கம் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடு மற்றும் தொழிநுட்பப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பாய்ச்சலின் தேவைப்பாடு என்பனவற்றை வரலாற்றின் எக்காலத்திலும் பார்க்க தற்காலத்தில் இலங்கையிலும் உணர ஆரம்பித்துள்ளனர். மீளாய்வு செய்யப்படும் 2020 ஆம் ஆண்டில் இலங்கை புலமைச் சொத்துக்களின் நிருவாகத்திற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான சுருக்கமான விபரம் ஒன்று மேற்படி அறிக்கையின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

அதற்கே உரித்தான விஷேடமான பண்புகளைக் கொண்ட புலமைச் சொத்துக்களை ஒரு வகைச் சொத்தாக அடையாளம் காண முடியும். மனிதனின் அறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான பணிக்காக எழும் சட்ட ரீதியாக அமுல்படுத்தக் கூடிய உரிமைகளின் தொகுதி புலமைச் சொத்துக்களாகக் கொள்ளப்படும். இலக்கியம், கலை அல்லது விஞ்ஞான ரீதியான பணிகள், சமகாலக் கலைஞர்களின் நாடகக் காட்சி நிகழ்ச்சிகள்,ஒலிப்பதிவு வட்டுக்கள்,ஒலிபரப்புதல்கள், புத்தாக்கங்கள்,கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள், வர்த்தகப் பெயர்கள் மற்றும் பதவிகள், அநீதியான போட்டிக்கு எதிரான பாதுகாப்பு, புவியியல் சுட்டி, புதிய தாவர இனங்கள், வெளிப்படுத்தப்படாத தகவல்கள் மற்றும் இணைந்த சுற்றுக்களின் அமைப்புத்திட்ட வடிவமைப்புக்கள் போன்ற துறைகளுக்கு உரிய உரிமைகள் இதில் உள்ளடங்கும். நபர்களினால் உரிமைகள் வகிக்கப்படும் ஏனைய சொத்துக்களை சார்ந்த வகையில் காணப்படும் சில பண்புகள் புலமைச் சொத்துக்களுக்கும் பொதுவானதாகும். உதாரணமாக, புலமைச் சொத்து என்பது ஒரு வகை சொத்தாகும் என்பதுடன் அதற்கு நிதிப் பெறுமதி ஒன்றும் காணப்படும். ஏனைய எந்தவொரு வகையான சொத்தினைப் போலவே புலமைச் சொத்திற்கும் உரித்தாக்குதல், மற்றைய தரப்பினருக்கு உரித்தினை ஒப்படைத்தல், விற்பனை செய்தல் அல்லது அனுமதிப்பத்திரங்களைக் கைச்சாத்திடல் ஆகியவற்றினை மேற்கொள்ள முடியும். புலமைச் சொத்தினை அடையாளம் காணல் அல்லது அதன் பௌதீக நிலையளவின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் என்பவற்றினை மேற்கொள்ள முடியாமையினால் புலமைச் சொத்து தொட்டு உணர முடியாத ஒரு சொத்தாகும். அவ்வாறாயினும், புலமைச் சொத்தினைப்

பாதுகாப்பதற்காக அதனைத் தெளிவான விதத்திலோ அல்லது முறையிலோ திட்டவட்டமாகக் கூறுதல் வேண்டும்.

கைத்தொழில் சொத்துக்கள் மற்றும் வெளியீட்டு உரிமைகள் என்ற வகையில் புலமைச் சொத்துக்கள் பிரதான வகையில் இரு வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன,

1. புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் மற்றும் புவியியல் குறிகாட்டிகள் என்பன உள்ளடங்கிய கைத்தொழில் சொத்துக்கள் மற்றும்
2. கல்வியியல் மற்றும் கலை சார் படைப்புக்களைத் தழுவும் வெளியீட்டு உரிமை, தற்காலக் கலைஞர்களின், ஒலிப் பதிவுகள் அல்லது ஒலிப்பதிவு வட்டுக்கள் தயாரிப்பாளர்களின் மற்றும் ஒளிபரப்பு அமைப்புக்களின் உரிமைகள் தொடர்பான உரித்துக்கள் அல்லது சார்ந்த உரிமைகள் என அழைக்கப்படும்.

1.2 தாபனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

தொலைநோக்கு

சந்தையினை மையமாகக்கொண்ட புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்றினை நாட்டிற்கு உரித்தாக்கிக் கொடுக்கும் அபிப்பிராயத்துடன் உயர் தரத்தினை நோக்காகக் கொண்ட விளைதிறன் மிக்க சேவைகளை வழங்கும் முதற்தர அரச நிறுவனம் என்ற நிலையினை அடைதல்

செயற்பணி

புலமைச் சொத்துக்களின் ஆக்கம், பாதுகாப்பு மற்றும் வர்த்தகமயமாக்கம் என்பவற்றின் ஊடாக பொருளாதார நிலைபேற்றுத் தன்மையினை ஊக்குவிக்கும் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்று தாபிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

நோக்கங்கள்

I. ாட்டு மக்களின் ஆக்கபூர்வத் தன்மையினை மேம்படுத்தல்.
II. வியாபார நடவடிக்கைகளுக்கான வசதிகளை செய்து கொடுத்தல்
III. முதலீட்டு ஊக்குவிப்பு
IV. நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அறிவினை முதன்மையாகக் கொண்ட உலகளாவிய நடவடிக்கைகளுடன் தேசிய பொருளாதாரத்தினை ஒன்றிணைத்தல்

1.3 பிரதான பணிகள்

I. வியாபாரச் சின்னங்கள்,ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றினைப் பதிவு செய்தல் மற்றும் ஒன்றிணைந்த முகாமைத்துவ சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல் உட்பட புலமைச் சொத்துக்களை நிருவகித்தல்.

II. புலமைச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பிரபல்யம் செய்தல்.

III. புலமைச் சொத்து விடயம் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.

IV. பொருளாதார விருத்திச் செயற்பாட்டிற்காக புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை விருத்தி செய்தல்.


V. புலமைச் சொத்துக்கள் சார் இலங்கையின் சர்வதேச பொறுப்பினை நிறைவேற்றல் மற்றும் அது தொடர்பான வலய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

VI. புலமைச் சொத்துக்கள் தொடர்பான கொள்கைகளை முன்மொழிதல்.


VII. வெளியீட்டு உரிமை மற்றும் தொடர்புடைய உரிமைகள் தொடர்பான துறையில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், புலமைச் சொத்துக்கள் தொடர்பான உரிமைகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் .

VIII. புலமைச் சொத்துக்கள் முகவர்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல்.

1.4 ஒழுங்கமைக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்



வியாபாரச் சின்னங்கள் பிரிவு

புலமைச் சொத்துக்கள் விடயத்தின் கீழ் கைத்தொழில் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு உள்ள வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள் என்பவற்றினைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வியாபாரச் சின்னங்கள் பிரிவினால் மிகவும் முக்கியமான கடமைப் பொறுப்பு ஒன்று நிறைவேற்றப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வியாபாரச் சின்ன விண்ணப்பப்படிவம் ஒன்று அதனைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரையான மிகவும் சிக்கலான நடைமுறை ஒன்றிற்கு உட்படும்.

விண்ணப்பப்படிவங்களை, அதன் முறையான தன்மை தொடர்பாக பரீட்சித்துப் பார்ப்பதுடன் முறையான தன்மை தொடர்பான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுமாயின் தேடல் பரீட்சிப்புக்கள் புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினிக் கட்டமைப்பின் (IPAS - Industrial Property Automation System) ஊடாக மேற்கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சித்துப் பார்த்ததன் பின்னர் சின்னங்களை, அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக பொறுப்பேற்றுக் கொள்ளப்படுவதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்காக மேற்படி விண்ணப்பதாரிகள், அவசியமெனின் உரிய விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கோ அல்லது நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக எழுத்து மூலம் விடயங்களை முன்வைக்கவோ முடியும். வெளியீட்டுக் கட்டணங்கள் (பிரசுரிப்பதற்கான கட்டணங்கள்) செலுத்தப்பட்டதன் பின்னர்,

ஏற்றுக்கொள்ளப்பட்ட சின்னங்கள் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதுடன் அதன் பின்னர் மூன்று மாதங்கள் கழிந்ததன் பிறகு உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறு வெளியிடப்பட்ட வியாபாரச் சின்னம் ஒன்றிற்கு எதிராக மூன்றாம் தரப்பினர் ஒருவரினால் எதிர்ப்புக்கள் ஏதும் முன்வைக்கப்படும் சந்தர்ப்பம் ஒன்றில், எதிர்ப்புக்களுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட முடியும் என்பதுடன் மேற்படி எதிர்ப்புக்களுக்கான விசாரணை பூர்த்தியடைந்ததன் பின்னர் தீர்மானம் வெளியிடப்படும். அவ்வாறான ஒரு தீர்மானத்தினால் பாதிப்பிற்கு உட்படும் தரப்பினர் இருப்பின், அவர்களுக்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்றினைச் சமர்ப்பிக்கும் ஆற்றலும் உள்ளது.

மேற்படி பிரிவானது பணிப்பாளர் (சட்டம்) ஒருவரின் தலைமையின் கீழ் செயற்படுவதுடன், இரண்டு உதவிப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், எட்டு புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள், பதினைந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒரு பெண் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையிலுள்ள நான்கு உத்தியோகத்தர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய முப்பத்தி இரண்டு பேரினைக்கொண்ட பதவியணி ஒன்றினால் பிரிவின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. மேற்படி பிரிவின் முழுமையான கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் என்பவற்றிற்காக புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி அவர்கள் பொறுப்புக்கூறுகின்றார்.

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் பிரதான பணிகள், ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரீட்சித்து ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களைப் பரீட்சித்தல் மற்றும் பதிவு செய்தல் என்பன தொடர்பான நடவடிக்கைகள் ஆகும்.

பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் ஆராய்ச்சிகள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, இரண்டு உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பத்து பேர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் அலுவலகப் பணியாளர் ஒருவர் ஆகியோரினை உள்ளடக்கி உள்ளது.

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பேணுதல் ஆக்கவுரிமைகள் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் உரிய தகவல்களைப் பொதுமக்களுக்கும் ,பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தரப்பினர்களுக்கும் இடையில் பரவச் செய்வதற்கான பொறுப்பினையும் வகிக்கின்றது.

மேற்படி அலுவலகத்தினால் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக கோப்பிடப்படும் ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரீட்சித்து, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை வழங்கி உரிய பாதுகாப்பு வழங்கப்படும். அவ்வாறு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர் அதற்கு உரிய புதுப்பித்தல்கள்,

ஒப்படைப்புக்கள் மற்றும் அனுமதி ஒப்பந்தங்கள் ஆகிய பதிவு செய்தலின் பின்னரான நடவடிக்கைகளுடன் தொடர்பான பல்வேறு பணிகளும் மேற்படி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படும். விஞ்ஞான மற்றும் வர்த்தக மக்கள், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள், கைத்தொழிலாளர்கள் உட்பட ஏனைய உரிய தரப்பினர்களின் பயன்பாட்டிற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் நிலவும் ஆக்கவுரிமைகள் மற்றும் தொழிநுட்பத் தகவல்கள் என்பவற்றினை சேகரித்து பகிர்ந்தளிக்கும் பணிக்காகவும் மேற்படி பிரிவு பொறுப்புக் கூறுகின்றது.

கைத்தொழில் வடிவமைப்புக்களைப் பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்து தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பங்களைப் பதிவு செய்தல் மேற்படி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், புதுப்பித்தல்கள், ஒப்படைப்புக்கள் மற்றும் அனுமதி ஒப்பந்தங்கள் உட்பட பதிவு செய்தலின் பின்னர் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் மேற்படி பிரிவினால் மேற்கொள்ளப்படும். கைத்தொழில் வடிவமைப்புக்களுடன் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் என்பனவும் மேற்படி அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்

தகவல் தொழிநுட்பப் பிரிவு

புலமைச் சொத்துக்கள் நடைமுறையின் பல்வேறு படிமுறைகளுக்கும் உரிய வகையில் புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினிக் கட்டமைப்பாகிய கைத்தொழில் சொத்துக்களின் நிருவாக்க் கட்டமைப்பினை (IPAS-Industrial Property Administrative System) இற்றைப்படுத்தல், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கணினிக் கட்டமைப்பின் ஊடாக வியாபாரச் சின்னங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள் ஆகிய சகலவற்றையும் பரீட்சிப்பதற்கும் மற்றும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் விண்ணப்பதாரிகளுக்கு உரிய தகவல்களை வழங்குதல், இணையத் தளத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் ஆகிய தகவல் தொழிநுட்பப் பணிகளும் மேற்படி பிரிவின் கீழ் நிறைவேற்றப்படும். பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கி உள்ளது.

தாபனப் பிரிவு

மேற்படி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்பினை வினைத்திறனுடனும் மற்றும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்காக அலுவலர் குழாத்தினை இணைத்துக்கொள்ளல், பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ஆகிய பணிகள் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். பெண் நிருவாக உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படும் மேற்படி பிரிவு மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர் ஒருவரையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரையும், நான்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களையும், சாரதிகள் நான்கு பேரினையும் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் இரண்டு பேரினையும் உள்ளடக்கி உள்ளது.

கணக்குகள் பிரிவு

மேற்படி திணைக்களத்திற்குக் கிடைக்கும் சகல வருமானங்களையும் சிறாப்பர் கருமபீடத்தின் ஊடாகப் பொறுப்பேற்றல், உரிய வகையில் வகைப்படுத்தி சரியான முறையில் கணக்குகளில் சேர்த்தல், அலுவலக உத்தியோகத்தர்களின் சம்பள ஊதியங்களை வழங்குதல் மற்றும் அலுவலகச் செலவுகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள், தாபனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடல், பெறுகை நடவடிக்கைகள் மற்றும் புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் நிதிய முகாமைத்துவம் என்பன கணக்குகள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பிரதான பணிகளாகும். மேற்படி கிளையில் கணக்காளரின் கண்காணிப்பின் கீழ் 10 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டு உள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடி வைக்கப்பட்டு இருந்தமை மற்றும் வரையருக்கப்பட்ட வகையில் சேவைகளை வழங்கிய காலப் பகுதியில் சகல வருமானங்களையும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நிகழ் நிலை (Online) முறையில் மேற்கொள்வதற்கு மேற்படி பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டமிடல் பிரிவு

நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்றுக்களுக்கு ஒத்தியங்கும் வகையில், நோக்கங்களை செயற்படுத்துவதற்கான உபாயமார்க்கத் திட்டத்தினைத் தயாரித்தல், நிறுவனத்தின் சாத்திய வளம் மற்றும் அடையாளம் காணப்பட்ட உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தின் விஷேட இலக்குகளை செயற்படுத்துவதற்கான வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல், அதற்கு ஒத்தியங்கும் வகையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தல், மேற்பார்வை மற்றும் பின்னாய்வு என்பவற்றினை மேற்கொள்ளல், செயலாற்றுகையினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல், விஷேடமாக உலகப் புலமைச் சொத்து அலுவலகத்திடம் (WIPO) சமர்ப்பிக்கப்பட வேண்டிய புள்ளிவிபரவியல் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை தேவையான பகுப்பாய்வுகளுடன் முன்வைத்தல், சேவை பெறுநர் பட்டயத்தினை நிறுவனத்தில் தாபித்தல் என்பவற்றின் மூலம் நிறுவனத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை விருத்தி செய்தல், அதனூடாக நிறுவனம் சார் விளைதிறனை விருத்தி செய்தல், நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையுடன் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், நிறுவனத்தின் இலக்குகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை அடையாளம் காணல், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்தல், பெறுகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குதல், என்பன திட்டமிடல் பிரிவின் கடமைப் பொறுப்பாகக் குறிப்பிட முடியும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஒருவரையும் மற்றும் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய ஓர் அலகாகும்.

1.6 திணைக்களத்தின் கீழ் நிலவும் நிதியங்கள்

புலமைச் சொத்து நிதியம்

1.7 வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள்

இல்லை


2. முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.1 நிதிச் செயலாற்றுகை

வருமானம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2020.12.31 ஆம் திகதியன்று மொத்த வருமானம் ரூ.மி. 159.9 ஆகும். அதில் 60% தொகை புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் வரும் கட்டணங்களை அறவிடுவதன் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆகும் என்பதுடன், எஞ்சிய 40% புலமைச் சொத்து நிதியத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீர் ஈட்டப்படும் வருமானங்களில் 1/3 பகுதி அரச திரட்டிய நிதியத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன், 2020.12.31 ஆம் திகதி ஆகும் போது குறித்த வருடத்திற்காக அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூ.மி. 31.7 ஆகும்.


வரைபு 1 : 2020.12.31 ஆம் திகதியன்று மொத்த வருமானம்



செலவு

புலமைச் சொத்து நிதியத்தினை நிருவகிக்கும் நடவடிக்கைகளுக்காக தேசிய புலமைச் சொத்து அலுவலக உத்தியோகத்தர்களின் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக தலைப்பு இலக்கம் 299 இன் கீழ் அரசினால் ரூ.மி. 39.7 தொகை ஒதுக்கீடுகள் ஏற்கப்பட்டு உள்ளன. எஞ்சிய சகல செலவினங்களும் புலமைச் சொத்து நிதியத்தினால் ஏற்கப்பட்டு உள்ளன. 2020.12.31 ஆம் திகதியன்று புலமைச் சொத்து நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டு உள்ள மொத்தத் தொகை ரூ.மி. 52.4 ஆகும்.

வரைபு 2 : 2020.12.31 ஆம் திகதியன்று மொத்தச் செலவு



2.2 பௌதீகச் செயலாற்றுகை

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் செயலாற்றுகை வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் ஆகிய பிரதான மூன்று துறைகளின் கீழ் முன்வைக்கப்படும். அதற்கு அமைய

- **வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் தொடர்பான செயலாற்றுகை**

அட்டவணை 1: 2020.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		
		மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்		11,900	9,593	81%
	1. தேடல் பரீட்சிப்புக்கள் மற்றும் தேடல் அறிக்கைகளைத் தயாரித்தல்	16,836	12,551	75%
	2. விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்களை அனுப்புதல் (சின்னங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரித்தல் தொடர்பாக)	17,284	9,511	55%
வெளியீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை		11,533	3,918	34%

	3 வியாபாரச் சின்னங்களைப் பிரசுரிப்பதற்காக உரிய வெளியீட்டுக் கட்டணங்களை செலுத்தியதன் பின்னர் மேற்படி உரிய வியாபாரச் சின்னங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களைத் தயாரிப்பதற்காக அனுப்புதல்.	14,336	7,684	54%
பதிவுக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை		10,844	6,773	62%
	4. வியாபாரச் சின்னங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல்	14,298	5,932	41%
பதிவினைப் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை		4,258	4,127	97%
	5.பதிவினைப் புதுப்பித்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	4,936	2,456	50%
சின்னங்கள் தொடர்பான ஒப்படைப்புக்களுக்கான கொடுப்பனவுகள்		1,494	1,162	78%
	6. ஒப்படைப்புக்களை அறிக்கையிட்டு வைத்தல்	3,383	510	15%
	7. பெயர்கள்/முகவரிகள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை அறிக்கையிட்டு வைத்தல்	1,775	589	33%
	8. கோப்புக்களை அகற்றி விடுதல்	1,200	1,188	99%
	9. எழுத்து மூல கோப்பிடல்கள் மற்றும் சத்தியக் கடதாசி வடிவில் வழங்கப்படும் சாட்சியங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்துதல்.	2,400	1,357	57%

COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக நிறுவனம் அமைந்துள்ள நகரம் மூடி வைக்கப்பட்டு இருந்தமையின் காரணமாக இந்த வருடத்தில் கிட்டத்தட்ட மூன்று மாத காலப்பகுதி அலுவலகம் மூடி வைக்கப்பட்டு இருந்தது.

மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மேற்படி காலப்பகுதியிலும் உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தல் (WFH) மேற்கொள்ளப்பட்டதுடன் மூன்று மாத காலம் பதவியணியின் 1/3 தொகையானோர் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்பட்டனர். அவ்வாறான வகையில் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் கடமைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலும் கூட, வியாபாரச் சின்னங்கள் பிரிவின் சில செயற்பாடுகளின் மூலம் 100% இலும் அதிகமான செயலாற்றுகை ஒன்றினை பெற்றுக்கொள்ள புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.

- **வியாபாரச் சின்னங்கள் தொர்பான செயலாற்றுகையின் பகுப்பாய்வு**


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் வியாபாரச்சின்னங்கள் பிரிவின் செயலாற்றுகை தொடர்பான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதற்கு அமைய

அ) கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை 2: கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,282	11,483	10,385	9,593
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	21,606	6,542	10,224	12,551

வரைபு 3: கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை - 2 வரைபு- 3 என்பவற்றின் மூலம் நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையில் ஒப்பீடு ஒன்று எடுத்துக் காட்டப்படுவதுடன் 2018 தொடக்கம் கிடைக்கப பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஒப்பீட்டளவில் பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் படிப்படியான விருத்தி ஒன்றினை எடுத்துக் காட்டுகின்றது.

ஆ) கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை 3: கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,282	11,483	10,385	9,593
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	10,622	5,192	14,993	5,932

வரைபு 4: கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை -3 வரைபு- 4 என்பவற்றின் மூலம் நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப் பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டினை எடுத்துக் காட்டுகின்றது. அதற்கு அமைய ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் அவதானிக்கக் கூடிய ஏற்ற இறக்கம் இந்த முறையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது குறைவான எண்ணிக்கையினைக் கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எவ்வாறெனினும் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகக் கடமைகள் குறிப்பிட்ட வழமையான முறையிலேயே வீட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்டமையின் (WFH) காரணமாக பூர்த்தி செய்யப்பட முடியாமையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இ) பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை 4: பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020
உள்நாட்டுச் சின்னங்கள்	6,324	1,998	5,250	2442
வெளிநாட்டுச் சின்னங்கள்	4,298	3,194	9,743	3590



வரைபு 5: பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 4 வரைபு- 5 என்பவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப் பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டப்பட்டு உள்ளது.

- **ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் தொடர்பான செயலாற்றுகை**

அட்டவணை – 5 : 2020.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

பணிகள்	பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)			கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள்
	மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%	
01. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	555	603	109%	
02 விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு *(உள்நாட்டு ரீதியில் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்கள், சர்வதேச ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT) கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்*	1000	557	56%	**
03. விண்ணப்பம் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து உள்ளதா எனப் பரீட்சித்தல்	1220	922	76%	விஷேட கருத்திட்டம் ஒன்றாக முதலாவது காலாண்டிற்காக 500 பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல் இலக்காகக் கொள்ளப்பட்டது. (எஞ்சிய 03 காலாண்டுகளுக்காக 240 பரீட்சிப்புக்கள் வீதம்)
04. திருத்தங்களைப் பரீட்சித்தல்	175	333	190%	
05. வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஜேர்னல்களைத் தயாரித்தல்	4	5	125%	
06. ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக சான்றிதழ்களைத் தயாரித்தல்	240	273	114%	
07. பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல்	640	322	50%	பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்காக கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை இலக்கு வைக்கப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்த ஒரு

				பெறுமானம் ஆகும். (கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 510 ஆகும். ஒப்பீட்டளவில் சதவீதம் 63% ஆகும்.)
08. பொது மக்களுக்கான தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதியினுள்ளே சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்	880	497	56%	**
09. ஒப்படைப்புக்களுக்கான அனுமதிகளை வழங்குதல்	*	1		* பெயர்கள்/ முகவரி மாற்றுதல்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளை உறுதியாக எதிர்பார்த்தல் சிரமமானது ஆகும்
10. பிரதிகள் / உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல்	*	18		
11. பெயர்/ முகவரிகள் என்பவற்றில் மாற்றம் செய்தல்	*	11		

** COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக நிறுவனம் அமைந்துள்ள நகரம் மூடி வைக்கப்பட்டு இருந்தமையின் காரணமாக இந்த வருடத்தில் கிட்டத்தட்ட மூன்று மாத காலப்பகுதி அலுவலகம் மூடி வைக்கப்பட்டு இருந்தது.

மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மேற்படி காலப்பகுதியிலும் உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தல் (WFH) மேற்கொள்ளப்பட்டதுடன் மூன்று மாத காலம் பதவியணியின் 1/3 தொகையானோர் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்பட்டனர். அவ்வாறான வகையில் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் கடமைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலும் கூட, வியாபாரச் சின்னங்கள் பிரிவின் சில செயற்பாடுகளின் மூலம் 100% இலும் அதிகமான செயலாற்றுகை ஒன்றினை பெற்றுக்கொள்ள புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.

- **ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் தொடர்பான செயலாற்றுகைப் பகுப்பாய்வு**


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் செயலாற்றுகை தொடர்பான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதற்கு அமைய

அ) கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 6 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை	543	603	611	603
தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	1,120	1,059	1,117	922

வரைபு - 6 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை - 6 வரைபு- 6 என்பவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மிகவும் கூடிய எண்ணிக்கையினைக் கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அதற்கு அமைய ஆக்கவுரிமைப் பிரிவில் தற்போதாகும் போது தாமதமடைந்துள்ள பணிகளின் அளவில் படிப்படியான வீழ்ச்சி ஒன்றினை எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்க முடியும்.

ஆ) கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 7 : கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	543	603	611	603
ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	181	212	175	273

வரைபு - 7 : கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை




அட்டவணை - 7 மற்றும் வரைபு - 5 என்பவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் கூடுதலான எண்ணிக்கையுடைய ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் ஆற்றல் கிடைத்து உள்ளது.

இ) ஆக்கவுரிமை வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 8 : பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020
உள்நாட்டு	54	64	39	47
வெளிநாட்டு	127	148	136	226

வரைபு - 8 : ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 8 மற்றும் வரைபு - 8 என்பவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வெவ்வேறாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. அதற்கு அமைய வெளிநாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் தெட்டத் தெளிவான விருத்தி ஒன்றினை அவதானிக்க முடியும்.

- **கைத்தொழில் வடிவமைப்புக்களின் விண்ணப்பங்கள் தொடர்பான செயலாற்றுகை**

அட்டவணை - 9 : 2020.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

பிரதான பணிகள்	பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		%	கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள்
	மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான		
01. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல் (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்)	330	281	85%	நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக தேசிய புலமைச் சொத்து அலுவலகம் 2020 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட காலவறையறை ஒன்றிற்கு மூடி வைக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் வீட்டில் இருந்து கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழிமுறை கிட்டத்தட்ட 04 மாத காலங்கள் பின்பற்றப்பட்டதுடன் கிட்டத்தட்ட 03 மாத காலப்பகுதி அளவு மொத்தப் பதவியணியின் 1/3 அளவானோர் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்பட்டதன் ஊடாக மேற்படி செயலாற்றுகை ஈட்டிக் கொள்ளப்பட்டு உள்ளது.
02. விண்ணப்பங்களின் ஆரம்பப் பரிட்சிப்பு (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்)	400	381	95%	
03. விண்ணப்பங்களின் தேடல் பரீட்சிப்பு (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்)	320	288	90%	
04 வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான ஜேர்னல்களைத் தயாரித்தல்	4	3	75%	
05. கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய சான்றிதழ்களைத் தயாரித்தல்	200	151	76%	
06. பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களைப் புதுப்பித்தல்	150	125	83%	
07. பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதி ஒன்றிற்குள் பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.	240	188	78%	
08. ஒப்படைப்புக்களுக்காக அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்	*	1		மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளை உறுதியாக இலக்கிற்கு உட்படுத்துதல்
09. பிரதிகள்/உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பவற்றினை வழங்குதல்	*	51		

10. பெயர்/முகவரி என்பவற்றினை மாற்றுதல்	*	-		கடினமானதாகும். உரிய பணிகள் நிறைவேற்றப்படுவது அது தொடர்பான கோரிக்கை ஒன்று கிடைக்கப் பெற்றதன் பின்னராகும்.

- **கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் தொடர்பான செயலாற்றுகை**


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் செயலாற்றுகை தொடர்பான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதற்கு அமைய

அ) கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 10 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	336	288	546	281
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	259	242	449	288

வரைபு - 9 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை - 10 மற்றும் வரைபு -9 என்பவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப்பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

ஆ) கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 11 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020
கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	336	288	546	281
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	330	124	258	151

வரைபு - 10 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை – 11 மற்றும் வரைபு - 10 என்பனவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப்பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன. அதற்கு அமைய 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் தென்பட்ட அசாதாரண விருத்தி இந்தமுறை இயல்பு நிலைக்கு வந்துள்ளமையினை அவதானிக்க முடிந்துள்ளது.

இ) பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 12 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020
உள்நாட்டு	189	86	197	122
வெளிநாட்டு	141	38	61	29

வரைபு - 11 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 12 மற்றும் வரைபு – 11 என்பனவற்றின் மூலம் கடந்த நான்கு வருடங்களுக்குள் கிடைக்கப்பெற்றுள்ள கைத்தொழில் வடிமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வெவ்வேறாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கையில் தெளிவாகத் தென்படும் வீழ்ச்சி ஒன்றினை அவதானிக்க முடியும்.

2.3 விஷேட வெற்றிகள்

- ✓ வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வசதிகளை வழங்கும் மெட்ரிட் இணைப்புப் பத்திரத்திற்குள் பிரவேசிப்பதற்காக உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிற்கு விண்ணப்பிப்பதற்கும் மற்றும் புலமைச் சொத்துச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி மேற்படி ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ளது. அதற்கு அமைய திருத்தம் செய்யப்பட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய சட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்டு உள்ளது.

- ✓ உரிமைத் தொகைக்குரிய உரித்தினை இசைத்துறையில் உள்ள கலைஞர்களுக்கு உரித்தாக்கிக் கொடுத்தல் தொடர்பாக ஆகக் குறைந்த கட்டணங்களைக் குறித்துரைத்து 2164/70 ஆம் இலக்க மற்றும் 2020.02.28 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டு உள்ளது.

அதாவது, பாடல் ஒன்று அல்லது இசை ரீதியான படைப்பு ஒன்றினை வானொலியில் ஒரு முறை ஒலிபரப்பும் போது ரூ. 20 தொகையாகிய ஆகக் குறைந்த தொகையினையும் மற்றும் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பும் போது ரூ. 100 தொகையாகிய ஆகக் குறைந்த தொகையினையும் மேற்படி பாடலுக்காக உரிமைத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும்.

- ✓ கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் திட்டத்தின் உறுப்புரிமை நாடு என்ற நிலையினை அடைவதற்கான அடிப்படை ஆய்வு நடவடிக்கைகளை, மேற்கொள்ளல் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.

- ✓ புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்காக புலமைச் சொத்துச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்களுடன் கூடிய சட்ட வரைவு, சட்ட வரைஞர் திணைக்களத்திடம் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டு உள்ளது.

- ✓ பொது மக்களுக்கு ஆக்கவுரிமைகள் தொடர்பான தகவல்களுக்குள் பிரவேசிப்பதற்கான வசதிகளை விருத்தி செய்வதற்காக 04 நவீன தொழிநுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்தியநிலையங்களை (TISC) இந்த ஆண்டிற்குள் தாபிப்பதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.

- ✓ மரகேஷ் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையினுள் ஏற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக புலமைச் சொத்துச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்களுக்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளது.

- ✓ இலங்கையினுள் இணைந்த சுற்றுக்கள் (Intergrated Circute (IC)) புத்தாக்கங்களைப் பதிவு செய்வதற்கான வசதிகள் என்பவற்றினை ஏற்படுத்துவதற்கான அடிப்படை ஆய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.

- ✓ ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் கோப்புக்களைப் பாதுகாத்தல், விண்ணப்பங்களைப் பரீட்சிக்கும் வினைத்திறனை அதிகரித்தல், தரவுகளுக்கான பிரவேசத்தினை துரிதப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட கோப்புக்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்காக மேற்படி ஆண்டிற்குள் கருத்திட்ட முன்மொழிவு ஒன்றினைத் தயாரித்து ஆரம்ப கட்டப் பணிகளை ஆரம்பிக்கும் ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.

- ✓ உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் புலமைச் சொத்துப் புத்தாக்கங்கள் மற்றும் வணிகமயமாக்கம் என்பவற்றினை துரிதப்படுத்துவதற்காக புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு ஒன்றினைக் (EIE) கட்டியெழுப்பும் கருத்திட்டத்திற்காக செயலமர்வுகளை நடாத்தும் ஆற்றல் கிடைத்துள்ளது

- ✓ சட்டத்தில் திருத்தம் செய்தல் மற்றும் புதிய ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் போன்ற கொள்கை மட்டத்திலான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நடாத்தப்படும் புலமைச் சொத்து ஆலோசகர் குழுக் கூட்டங்கள் 04 இனை கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் கீழும் வெற்றிகரமாக நடாத்துவதற்கான ஆற்றல் கிடைத்துள்ளது.

கொவிட் 19 தொற்றுநோய் நிலவிய காலப்பகுதியில் விண்ணப்பதாரிகளுக்கும் மற்றும் சேவை பெறுநர்களுக்கும் சேவையினை வழங்குவதற்காக நிகழ்நிலைக் (Online) கோப்பிடும் வழிமுறை ஒன்றினை 2020 மார்ச் மாதம் தொடக்கம் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்றதுடன், அதற்கு அமைய சேவையினைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.





2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற "சிறந்த வருடாந்த அறிக்கை – 2018" விருது வழங்கும் வைபவத்தில் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் கீழ், 2018 வருடாந்த அறிக்கைக்காக புலமைச் சொத்து அலுவலகம் முதல் இரண்டாம் இடத்திற்கான விருதினை வெற்றிகொள்ளல்.

2.4 சவால்கள்

- **தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கான நிலையான கட்டிடம் ஒன்று இல்லாமை மற்றும் போதிய இடவசதிகள் இல்லாமை.**

மேற்படி திணைக்களம் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 27 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் பூராகவும் பேணப்பட்டு வருவது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு உரிய சமாகம் மெதுர கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 3 ஆவது மாடியிலும் மற்றும் 2 ஆவது மாடியின் ஒரு பகுதி உரித்தாகும் வரையருக்குப்பட்ட அலுவலக இடப்பிரதேசத்தில் ஆகும். கட்டிடத்தின் மேற்படி இடப் பிரதேசத்தினையும் மீண்டும் பெற்றுத் தருமாறு 05 வருட காலங்கள் பூராகவும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளுக்கு அமைய, தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை பொருத்தமான வேறு ஒரு இடத்தில் நிலைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியிலும் சில அரச நிறுவனங்களிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், மேற்படி முயற்சிகள் வெற்றியளிக்காமையின் காரணமாக, தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு இதுவரை பொருத்தமான அலுவலகக் கட்டிடம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் சென்றுள்ளது.

அவ்வாறான ஒரு நிலைமையின் கீழ் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை நவீனமயப்படுத்துவதற்காக பொதுத் திறைசேரியில் இருந்து ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் செலவு செய்யப்பட்டிருந்தால் அது பயனற்ற ஒரு செலவாகக் கூடிய வாய்ப்பு காணப்பட்டமையினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை நவீனமயப்படுத்தும் உத்தேசக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாமல் சென்றது.

- **தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பாகிய** (Industril Property Atomation System-IPAS) **இனை விருத்தி செய்வதில் சிரமம்.**

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பினை விருத்தி செய்வதற்காக e-NIPO கருத்திட்டத்தினை ஸ்தாபிப்பதற்கு இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் முகவரகத்துடன் (ICTA) 2016 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்படி நிறுவனத்தினால் மீறப்பட்டமை காரணமாக e-NIPO கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தாமதமடைந்தது. மேற்படி நெருக்கடி காரணமாக மென்பொருட்கள் கட்டமைப்பினை விருத்திசெய்தல் தாமதமடைந்து உள்ளது. எவ்வாறாயினும் இது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றிற்கு கிடைக்கப்பெற்ற அனுமதிக்கு அமைய மேற்படி கருத்திட்டத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான உதவியினை ICTA நிறுவனம் வழங்குதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

- **மெட்ரிட் பட்டயத்துடன் ஒத்திசைதல்.**

உலக புலமைச் சொத்துக்கள் (WIPO) அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் செயன்முறை உள்ளடக்கப்பட்ட மெட்ரிட் இணைப்புப் பத்திரத்திற்குள் பிரவேசித்தல் மற்றும் அதற்கு ஒத்தியங்கும் வகையில் புலமைச் சொத்துச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன அடையாளம் காணப்பட்ட சவால் ஒன்றாகும்.

2.5 அச்சுருத்தல்கள் தொடர்பான பகுப்பாய்வு மற்றும் குறைத்துக் கொள்வதற்கான உபாய வழிமுறைகள்

2020 ஆம் ஆண்டிற்கான தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் விடயப் பரப்புடன் தொடர்புடைய அச்சுருத்தல்களுக்கு உரிய பிரிவுகள் அல்லது பணிகள் அடையாளம் காணப்படவில்லை. அவ்வாறெனினும் நாடு பூராகவும் எழுந்துள்ள கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட சுகாதார அச்சுருத்தலின் அடிப்படையில் மனித செயற்பாடுகள் வரையருக்கப்படல் இந்த வருடத்தில் செயலாற்றுகையின் மீது எதிர்மறை ரீதியான தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு ஒத்தியங்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொற்றுநோயின் தாக்கம் என்பன பாரிய அளவில் நிலவிய காலப்பகுதியில் பதவியணியின் 1/3 பகுதியினரை சேவைக்கு அழைத்தல் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்யும் (WFH) வழிமுறை ஒன்றினை அறிமுகம் செய்தல் என்பவற்றின் மூலம் மேற்படி தாக்கத்தினைக் குறைத்துக் கொள்வதற்கு தாபனத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2.6 எதிர்கால இலக்குகள்

குறுகிய கால இலக்குகள்

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினைப் பேணி வருவதற்குப் பொருத்தமான கட்டிடம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விளைதிறன் அதிகரிக்கும் வகையில் அலுவலகத்தினை மீள்கட்டமைப்புச் செய்தல்.
- புலமைச் சொத்துச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பினால் (WIPO) நடைமுறைப்படுத்தப்படும் வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வழிமுறை உள்ளடங்கிய மெட்ரிட் இணைப்புப் பத்திரத்திற்குள் பிரவேசித்தல்.
- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை கவர்ச்சிகரமான மற்றும் அதிகூடிய விளைதிறன் கொண்ட அரச நிறுவனம் ஒன்றாகக் கட்டியெழுப்புதல்.

- பொதுமக்களுக்கு ஆக்கவுரிமைகள் தொடர்பான தகவல்களுக்குள் பிரவேசிப்பதற்கான வசதிகளை விருத்தி செய்வதற்காக நவீன தொழிநுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்தியநிலையங்கள் (TISCs) இரண்டினை 2021 ஆம் ஆண்டிற்குள் தாபித்தல்.
- இணைந்த சுற்றுக்களை (Intergrated Circute (IC)) பதிவு செய்தல் தொடர்பான வழிகாட்டி ஒன்றினைத் தயாரித்தல்.
- கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் கட்டமைப்பிற்குள் பிரவேசிப்பதற்காக கருத்திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்தல் மற்றும் அது தொடர்பான ஆலோசனை வழங்கல் கூட்டங்களை நடாத்துதல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் புலமைச் சொத்துக்களின் புத்தாக்கங்கள் மற்றும் வணிகமயமாக்கம் என்பவற்றினைத் துரிதப்படுத்துவதற்காக புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு ஒன்றினைக் (EIE) கட்டியெழுப்பும் கருத்திட்டத்திற்காக செயலமர்வுகளை நடாத்துதல்.
- புவியியில் குறிகாட்டிகளைப் பதிவு செய்யும் வசதிகளை செய்து கொடுத்தல்.

ஏதேனும் பொருள் ஒன்றின் அல்லது படைப்பு ஒன்றின் தோற்றம் ஏதேனும் குறிப்பிட்ட ஒரு புவியியில் பிரதேசத்தில் ஆகும் எனவும் அதற்கு விஷேட குணவியல்புகள் தன்மைகள் மற்றும் நற்பெயர் ஒன்று மேற்படி புவியியில் தோற்றத்தின் காரணமாக உருவாகி உள்ளது எனவும் நுகர்வோருக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் எடுத்துக் காட்டுவதற்காக புவியியல் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதன் ஊடாக இலங்கைத் தேயிலை, இலங்கைக் கருவா போன்ற புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் இலங்கை உற்பத்திகளுக்காக அதிகூடிய வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு உரித்தான புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறை ஒன்று காணப்படுவதில்லை என்பதுடன் சான்றிதழ் சின்னங்களைப் பதிவு செய்தல் மாத்திரம் இதுவரை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பாகிய IPAS இனை (கைத்தொழில் சொத்துக்களின் நிருவாகக் கட்டமைப்பு) விருத்தி செய்தல்

நீண்ட கால இலக்குகள்

- ஆக்கவுரிமைகள் மற்றும் ஆக்கவுரிமைகள் அல்லாத தொழிநுட்பத் தகவல்களுக்கான பொதுமக்களின் பிரவேசத்தினைப் பெற்றுக்கொள்ளல்.
- கோப்புக்களை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டத்தினை அறிமுகம் செய்தல்.
- புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு (EIE) ஒன்றினைக் கட்டியெழுப்புதல்.

- இணைந்த சுற்றுக்களைப் (Intergrated Circute (IC)) பதிவு செய்தல் தொடர்பான வசதிகளை செய்து கொடுத்தல்.
- கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் கட்டமைப்பிற்குள் பிரவேசித்தல்.
- இலத்திரனியல் ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் பாடல்கள், இசை சார் கலைப் படைப்புக்களுக்காக ஆரம்பப் படைப்பாளிகளுக்கு உரிமைத் தொகையினை செலுத்துதல் தொடர்பான உரிய பொறிமுறையினை மேலும் விருத்தி செய்தல்..

கீதாஞ்சலி ஆர்.ரணவக

புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி

3. ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை

3.(அ) ஆண்டுற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

3. (அ) 1 நிதிக் கூற்றுக்கள்

புலமைச் சொத்து நிதியம்

2020.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்புக்கள்	2020.12.31	2019.12.31
வருமானம்		ரூ.	ரூ.
வியாபாரச் சின்னங்களின் வருமானம்	3	55,822,249	65,078,863
ஆக்கவுரிமைகளின் வருமானம்	3	7,108,482	6,587,974
